பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 03 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடியின் தலைமையில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்து வருவதாக மொரீஷியஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு தனஞ்செய் **Ramful** தெரிவித்துள்ளார்.

2. உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வரும் பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் நன்றி தெரிவித்துள்ளார்.

3. தமிழக அரசின் வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட்டை மாநில நிதி அமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

4. வண்ணங்களின் திருவிழாவான ஹோலி பண்டிகை இன்று நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது.

5. பாகிஸ்தான் ரயில் கடத்தல் சம்பவத்தில் தொடர்பு இருப்பதாக அந்நாட்டு அரசு கூறியுள்ள குற்றச்சாட்டிற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடியின் தலைமையில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுத்து வருகிறது என மொரீஷியஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு தனஞ்செய் **Ramful** தெரிவித்துள்ளார்.

திரு நரேந்திரமோடி மொரீஷியஸில் பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ள நிலையில், அந்நாட்டு அமைச்சர் திரு தனஞ்செய் ராம்புல் வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியா

பொருளாதாரத்தில் வலிமை வாய்ந்த நாடாக மட்டுமன்றி, வல்லரசு நாடாகவும் உருவெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வரும் ஆண்டுகளில் உலக நாடுகளின் பார்வை இந்தியா மீது இருக்கும் என்று கூறியுள்ள அவர், அத்தகைய சிறப்பு வாய்ந்த இந்தியாவுடன் உறவு வைத்திருப்பதில் மொரீஷியஸ் மிகுந்த பெருமிதம் அடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவர தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதற்காக பிரதமர் திரு நரேந்திரமோடி, அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் உள்ளிட்ட தலைவர்களுக்கு ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் நன்றி தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலகளாவிய பல்வேறு சவால்களுக்கு இடையிலும் உக்ரைன் போருக்கு அமைதி தீர்வுகாண இந்த தலைவர்கள் மேற்கொண்டு வரும் முயற்சி வரவேற்கத்தக்கது என்றார்.

இந்த தலைவர்கள் அனைவரும் இப்பிரச்சினைக்காக நேரம் ஒதுக்கி பணியாற்றி வருவதை பாராட்டுவதாகக் கூறியுள்ள திரு புட்டின், போரை முடிவுக்குக் கொண்டு வந்து உயிரிழப்புகளைத் தடுப்பதற்காக அவர்கள் அரும்பணி ஆற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழக அரசின் 2025-26-ஆம் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசிய நிதி அமைச்சர் திரு தங்கம் தென்னரசு, வரும் ஆண்டில் மாநிலத்தில் மூவாயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் ஒரு லட்சம் புதிய கான்கிரிட் வீடுகள் கட்டித்தரப்படும் என்று அறிவித்தார்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ஆயிரத்து 87 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்,

நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்திற்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்,

மாநிலத்தில் உள்ள கிராமச் சாலைகள் இரண்டாயிரத்து 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்,

அண்ணா பல்கலைக் கழகம் அடுத்த ஐந்தாண்டுகளில் 500 கோடி ரூபாய் செலவில் சிறந்த கல்வி நிறுவனமாக மேம்படுத்தப்படும்,

சேலம், கடலூர், நெல்லையில் புதிய நூலகங்கள் அமைக்கப்படும்,

அரசு பள்ளிகளில் உள்ள 880 கணினி ஆய்வகம் மற்றும் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும்

தமிழ்மொழியின் தொன்மையை அறிந்து கொள்ளும் வகையில், மதுரை உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் கண்காட்சிக் கூடம் அமைக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

*( சவுண்ட்பைட் - தங்கம் தென்னரசு) ----50 செகண்ட்*

திருக்குறளை 193 மொழிகளில் மொழிபெயர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் இருமொழிக் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படும் என்றும் அவர் கூறினார்.

உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கான புதுமைப் பெண் திட்டத்திற்கு 420 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்

பத்தாயிரம் புதிய மகளிர் சுயஉதவி குழுக்கள் ஏற்படுத்தப்படும்,

காலை உணவுத்திட்டம் நகர்ப்புற பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்,

முதியோர் பராமரிப்புக்கு ‘அன்புச்சோலை’ என்ற புதிய திட்டம் கொண்டுவரப்படும்,

மூன்றாம் பாலினத்தவருக்கு ஊர்க்காவல் படையில் பணி வாய்ப்பு,

புதுக்கோட்டை, திருப்பூர் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கூட்டுக்குடிநீர் திட்டம்,

சென்னையில் 100 கோடி ரூபாய் செலவில் சிங்கப்பூர் நாட்டுடன் இணைந்து அறிவியல் மையம் அமைக்கப்படும்,

சென்னை பூந்தமல்லி – போரூர் இடையேயான மெட்ரோ ரயில் சேவை வரும் டிசம்பர் மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்,

சென்னை விமான நிலயத்திலிருந்து – கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை மெட்ரோ ரயில் சேவை விரிவுபடுத்தப்படும்

கோவை சூலூர் மற்றும் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் செமி கண்டக்டர் பூங்கா, ஓசூர், விருதுநகரில் டைடல் பூங்கா அமைக்கப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் திரு தங்கம் தென்னரசு வெளியிட்டார்.

**[]<<<>>>[]**

முன்னதாக அஇஅதிமுக, பிஜேபி உறுப்பினர்கள் சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

டாஸ்மாக் மதுபான விற்பனையில் நடைபெற்றதாக கூறப்படும் முறைகேடு பற்றி சட்டப்பேரவையில் விவாதிக்க வேண்டுமென்று அஇஅதிமுக உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதேபோன்று மதுபான முறைகேடு மற்றும் ரூபாய் குறியீடு மாற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி உறுப்பினர்களும் பிரச்சினை எழுப்பினர்.

இதற்கு பேரவைத் தலைவர் அனுமதி மறுத்ததை அடுத்து அஇஅதிமுக மற்றும் பிஜேபி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

**[]<<<>>>[]**

வண்ணங்களின் திருவிழாவான ஹோலி பண்டிகை இன்று நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மக்கள் ஒருவருக்கொருவர் வண்ணப் பொடிகைளத் தூவி வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

இதையொட்டி தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த பண்டிகை மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி, ஒற்றுமை மற்றும் செழிப்பை ஏற்படுத்தட்டும் என்று அவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா இன்று மாலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இன்றும் நாளையும் நடைபெறும் இந்த விழாவில் தமிழகத்திலிருந்து மூவாயிரத்து 432 பேர் பங்கேற்கின்றனர்.

இவர்கள் ராமேஸ்வரத்திலிருந்து படகுகள் மூலம் புறப்பட்டுச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - கார்த்திகேயன் ) -- 45 செகண்ட்*

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் ஐந்து தொழில் பூங்காக்களை உருவாக்க யூனியன் பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக ஜம்மு மாவட்டத்திற்கு உட்பட்ட நான்கு தாலுகாக்களில் சுமார் 500 கனால் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தொழில்துறை அமைச்சர் திரு சுரீந்தர் சௌத்திரி தெரிவித்துள்ளார்.

அக்னூர், ஆர் எஸ் புரா, ஜம்மு மற்றும் தீலி ஆகிய இடங்களில் அமைக்கப்படும் இந்த தொழில் பூங்காக்கள் மூலம் இரண்டாயிரத்து 74 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

பஞ்சாபில் போதைப்பொருள் கடத்தலை கட்டுப்படுத்த காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் கடந்த ஒன்றாம் தேதியிலிருந்து இதுவரை ஆயிரத்து 750 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில நிதி அமைச்சர் திரு ஹர்பால்சிங் சீமா தெரிவித்துள்ளார்.

அவர்களிடமிருந்து சுமார் 60 லட்சம் ரூபாய் பணம் மற்றும் 80 கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

போதைப்பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

மணிப்பூரில் காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் ஒரு பெண் உட்பட நான்கு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம்பால் பள்ளத்தாக்குப் பகுதிகளில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த பெண் தீவிரவாதியும், மியான்மர் எல்லையில் ஐக்கிய தேசிய விடுதலை முன்னணி அமைப்பைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து துப்பாக்கிகள், வெடிப்பொருட்கள், செல்போன் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

**[]<<<>>>[]**

பாகிஸ்தானில் ரயில் கடத்தப்பட்ட சம்பவத்தில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக அந்நாட்டு அரசு கூறியுள்ள குற்றச்சாட்டிற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தானின் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது என கூறியுள்ளார்.

பாகிஸ்தான் உலகளாவிய தீவிரவாதத்தின் மையமாக திகழ்வதை உலக நாடுகள் அறியும் என்று குறிப்பிட்டுள்ள அவர், உள்நாட்டு பிரச்சினைகளுக்கு பிற நாடுகள் மீது குற்றம்சாட்டுவதை தவிர்க்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

***End of News***